## பாடம் - 13

## الدرس الثالث عشر

### நபிகளாரின் உடலமைப்பு

### صفة النبي ﷺ – الخلقية

நபிகள் நாயகம்(ஸல்)அவர்கள் அதிக உயரமாகவோ அதிகக் குள்ளமாகவோ இன்றி நடுத்தர வளர்த்தி உடையவர்களாக இருந்தார்கள். அகன்ற தோள் புஜங்களும், விரிந்த மார்பும், பொருத்தமான உறுப்புக்களும் உடையவர்கள். மனிதர்களிலேயே அழகிய முகமுடைய அவர்கள் செந்நிறம் கலந்த வெள்ளை நிறத்தில் இருப்பார்கள். மேலும் வட்ட முகமும், சுர்மா இடப்பட்டது போன்ற கண்களும், மெல்லிய மூக்கும், அழகான வாயும், அடர்ந்த தாடியும் கொண்டவர்கள். நபிகள் நாயகம்(ஸல்) அவர்கள் நறுமணம் கமழும் மென்மையான மேனியை உடையவர்களாவர்.

நபிகள் நாயகம்(ஸல்) அவர்களைப் பற்றி அனஸ்(ரலி) கூறும்போது, 'நபிகள் நாயகம்(ஸல்) அவர்களின் வாடையை விட நறுமணமுள்ள கஸ்தூரியையோ அல்லது வேறு எந்த வாசனைப் பொருளையோ நான் நுகர்ந்தது கிடையாது. மேலும் நபிகள் நாயகம்(ஸல்) அவர்களை விட மென்மையான பட்டாடையையோ வேறு எதையுமோ நான் ஸ்பரிசித்தது கிடையாது' எனக் கூறினார்கள். (முஸ்லிம்-2330)

நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மலர்ந்த முகத்துடனும் எப்பொழுதும் புன்னகையாகவுமே இருப்பார்கள். அழகிய குரலுடைய அவர்கள் குறைவாகப் பேசுபவர்களாக இருந்தார்கள். அனஸ் (ரலி) அவர்கள் கூறியதாவது: 'நபிகள் நாயகம்(ஸல்) அவர்கள் மனிதர்களிலேயே மிக அழகானவர்களாகவும், வாரி வழங்குபவர்களாகவும், வீரமிக்கவர்களாகவும் இருந்தார்கள்.' (முஸ்லிம்-2307)

### நபிகளாரின் நற்குணங்கள்

நபிகள் நாயகம்(ஸல்)அவர்கள் மக்கள் அனைவரினும் வீரமிக்கவர்களாகத் திகழ்ந்தார்கள். அலீ(ரலி) அவர்கள் கூறினார்கள்: '(போர்க்களத்தில்) எதிரிப் படையினரும் நாங்களும் நேருக்கு நேர் மோதி, போர் உக்கிரமமாக நடை பெறும்போது நாங்கள் நபிகள் நாயகம்(ஸல்) அவர்களுக்கு அருகில் நின்று போரிடுவதன் மூலம் எங்களை தற்காத்துக் கொள்வோம்.' (அஹ்மத்-1276)

நபியவர்கள் மக்கள் அனைவரினும் பெரும் கொடைவள்ளலாகத் திகழ்ந் தார்கள். அவர்களிடம் யாரும் எதையும் கேட்டு அவர்கள் இல்லையெனக் கூறியதில்லை. அவர்கள் மக்களில் பெரும் சகிப்புத் தன்மை உடையவர்களாக இருந்தார்கள். அவர்கள் தமக்காக யாரையும் கோபப்பட்டதும் கிடையாது. தமக்காக யாரையும் பழிவாங்கியதும் கிடையாது. ஆனால் அல்லாஹ்வினால் புனிதமாக்கப்பட்டவற்றிற்கு பங்கம் விளைவிக்கப்படும்போது மட்டும் அல்லாஹ் வுக்காக என பழிவாங்குபவர்களாக இருந்துள்ளார்கள்.

உரிமைகள் விஷயத்தில் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் தங்களைச் சேர்ந்தவர், அந்நியர் பலமிக்கவர், பலவீனர் அனைவரும் சமமே. மேலும் 'இறையச்சத்தைக் கொண்டே தவிர ஒருவர் இன்னொரு வரை விடச் சிறந்து விளங்க முடியாது. மக்கள் அனைவரும் சமமே! முன் சென்ற சமுதாயம் அழிந்து போனதற்குக் காரணம் அவர்களில் செல்வாக்குமிக்கவன் திருடினால் அவனை விட்டுவிடுவார்கள். பலவீனன் திருடினால் அவனுக்குத் தண்டனை நிறைவேற்றுவார்கள்' என்பதைத் திட்டவட்டமாகக் கூறினார்கள். மேலும் 'அல்லாஹ்வின் மீது ஆணையாக முஹம்மதின் மகள் ஃபாத்திமா திருடினாலும் அவரது கையையும் வெட்டியே தீருவேன்' என்றும் கூறினார்கள்.

நபிகள் நாயகம்(ஸல்) அவர்கள் எந்த உணவையும் குறை கூறியதில்லை. விரும்பினால் உண்பார்கள். விரும்பமில்லையெனில் விட்டுவிடுவார்கள். நபிகள் நாயகம்(ஸல்) அவர்களின் குடும்பத்தினர் அவர்களின் வீட்டில் அடுப்பு எரிக்காமலேயே ஓரிரு மாதங்களைக் கழித்திருக்கின்றனர். பேரீத்தம் பழமும் தண்ணீரும் தான். அவர்களின் உணவாக இருந்திருக்கிறது. நபிகள் நாயகம் அவர்கள் பசியின் காரணமாக தமது வயிற்றில் ஒன்றிரண்டு கல்லைக் கட்டிக்கொள்வார்கள். அறுந்த செருப்பையும் கிழிந்த ஆடையையும் தாமே தைத்துக் கொள்வார்கள். வீட்டு வேலையில் தம் மனைவியருக்கு உதவுவார்கள். நோயாளிகளை நோய்விசாரிக்கச் செல்வார்கள்.

நபிகள் நாயகம்(ஸல்) மக்களில் மிக்க பணிவானவர்களாக இருந்தார்கள். யார் விருந்திற்கு அழைத்தாலும் செல்வந்தர், ஏழை, செல்வாக்குள்ளவர், செல்வாக்கில்லாதவர் என்கிற பாகுபாடின்றி அதனை ஏற்றுக் கொள்வார்கள். ஏழைகளை நேசிப்பார்கள். அவர்களின் ஜனாஸாவில் கலந்து கொள்வார்கள். ஏழை நோயாளிகளையும் நோய் விசாரிக்கச் செல்வார்கள். ஏழை என்பதற்காக யாரையும் இழிவாகக் கருதமாட்டார்கள். எந்த அரசனுக்கும் அவனது அதிகாரத்திற்காகப் பயப்பட மாட்டார்கள். குதிரை, ஒட்டகம், கழுதை, கோவேறு கழுதை என எதிலும் பயணம் செய்வார்கள்.

நபிகள் நாயகம்(ஸல்)அவர்களை எத்தனை எத்தனை துன்பங்கள், துயரங்கள் வாட்டினாலும் மக்களிலேயே அதிகம் புன்னகையும் மலர்ந்த முகமும் உடையவர்களாக இருப்பார்கள். அவர்கள் நறுமணத்தை விரும்புவார்கள். அருவறுக்கத்தக்க வாடையை வெறுப்பார்கள். அல்லாஹ் அவர்களுக்கு நற்குணங்களையும் நற்செயல்களையும் ஒருசேரக் கொடுத்திருந்தான். முன்னோர் பின்னோர் யாருக்குமே வழங்கப்படாத கல்வி ஞானத்தை அவர்களுக்கு வழங்கியிருந்தான். இத்தனைக்கும் அவர்கள் எழுதப் படிக்கத் தெரியாதவர்கள்! மனிதர்களில் யாரும் அவர்களுக்கு ஆசிரியராக இருந்தது கிடையாது. இந்தக் குர்ஆனை அல்லாஹ்விடமிருந்தே கொண்டு வந்தார்கள். இது பற்றி அல்லாஹ் கூறும்போது, 'மனிதர்கள் மற்றும் ஜின்கள் அனைவரும் ஒன்று சேர்ந்து இந்தக் குர்ஆனைப் போன்ற ஒன்றைக் கொண்டுவர முயன்றாலும் இதைப் போன்று அவர்களால் கொண்டு வர முடியாது. அவர்கள் ஒருவர் மற்றவருக்கு உதவியாளராக இருந்தாலும் சரியே!'(17:88) என்று கூறுகிறான்.

நபிகள் நாயகம்(ஸல்)அவர்கள் சிறு வயது முதல் எழுதப்படிக்கத் தெரியாதவர்களாகவே வளர்ந்து வந்ததால் பொய்யுரைப்பவர்கள் 'இவர் வேதத்தை பிறரிடமிருந்து எழுதிக்கொண்டார் அல்லது கற்றுக்கொண்டார் அல்லது முன்னோர்களின் புத்தகங்களிலிருந்து படித்துத் தெரிந்து கொண்டார்' என்று அவர்களைப் பற்றி, பொய்யுரைக்க வழியில்லாமல் போய்விட்டது!